T-UN-421

உ

கடவுள் துணை.

# முத்துச்சோளம்

## பயிர்செய்யும் விதம்.

இஃது

தஞ்சாவூர் விவசாயசங்க பிரசிடெண்டு

கனம்பொருந்திய R. F. Austin, Esq., B.A., I.C.S.

துரையவர்கள் அபிப்பிராயப்படி

தஞ்சாவூர் கருணாநிதி வைத்தியசாலை

மானேஜர்

ராவ்ஸாஹெப் மு. ஆபிரகாம் பண்டிதரால்

எழுதப்பட்டு

ஷோ அண்டு கோ., பிரீமியர் பிரெஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1911

கடவுள் துணை.

# முத்துச்சோளம்.

## முகவுரை.

இதில் தங்கவர்ணச்சோளம், பால் வெள்ளைச் சோளம், சர்க்கரைச்சோளம், இவைகளைப் பயிர் செய்யும் விதத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஆஸ்ட்ரேலியாவில் Golden Ring Maize என்றும் அமெரிக்காவில் Golden Beauty என்றும் பெயர் விளங்கும் தங்கவர்ணச்சோள விதையில் 19 விதைகள் தஞ்சாவூர் விவசாயச் சங்கக் காரியதர்சியாயிருந்த ராவ் பகதூர் சீனிவாச பிள்ளை அவர்களால் 1905ஸு மார்ச்சுமீ துவக்கத்தில் எனக்குக் கிடைத்தது. அப்போது சோளம் பயிர் செய்யும் கால மில்லாதிருந்தாலும், அதை விருத்திசெய்யவேண்டு மென்னும் பிரியத்தினால் மார்ச்சுமீ கடைசியில் சாதாரணமுத்துச்சோளம் (பயிர் செய்யும் விதம்போல்) கொஞ்சம் நிலத்தில் பயிரிட்டுக் களைகொத்திக் கொடுத்து, ஈரங்காயாமல் தண்ணீர் விட்டுத் தூரில் மண்ணணைக்கப்பட்டது. ஜூலைமீ மத்தியில் கதிர்கள் முற்றிப் பழுத்துவிட்டன. சோளம் பயிரிட ஏற்றகாலமில்லாதிருந்தும் கூடியவரையில் மணிபிடித்திருந்தது. அவைகளில் அதிகப்பெரிதும் திடமுமான 120 விதைகளைத் தனியாகப் பொறுக்கிப் பூச்சி பிடியாதிருக்கவும், நன்றாய் முளைக்கவுமேதுவாயிருக்கத்தக்கதாய், மாட்டின் மூத்திரமும் சாணமும்சேர்ந்த சகதியில் புரட்டி, கொஞ்சம் சாம்பல்தூவி நாலு நாள் நன்றாய்க் காயவைத்து, ஈரம்காயாமல் மண்பாத்திரத்தில் மூடிவைக்கப்பட்டது. பின் ஆகஸ்டுமீ நிலம் தயார் செய்யப்பட்டு, ஆகஸ்டுமீ மத்தியில் பொறுக்கு எடுத்த விதைகள் தனியாகவும், மற்ற விதைகள் தனியாகவும் பயிர் பண்ணப்பட்டது. இரண்டு பயிர்களுக்கும் ஒரே மாதிரியே உரம்வைக்கப்பட்டும், களை எடுத்தும், மண்ணணைத்

தும், தண்ணீர்பாய்ச்சப்பட்டும் வந்தது. இவைகளில் பொறுக்கி எடுக்கப்பட்ட விதைகளிலிருந் துண்டான பயிர்கள் மற்றவைகளைப் பார்க்கிலும் இரண்டுபங்கு அதிக வளர்ச்சியும், பயிர் உறப்பாயும், இருண்ட பச்சையாகவு மிருந்த தோடு, கதிர் பெரிதாகவும், மணி நெருக்கமாகவும் பிடித்திருந்தன. மற்ற விதைகளி லிருந்துண்டான பயிர்கள் வெளுத்து மெலிந்தனவாகவும், கதிர்கள் வாங்காமல் மலடாகவும் போய்விட்டன. இத்தானியம் அதிகப்பிரயோஜனந் தருமென்று கண்டு வருஷாவருஷம் பயிர்செய்யப்பட்டு விருத்தி யாகிக் கொண்டேவருகிறது. விதைக்குவேண்டிய திடமானகதிர் களைச் சிவப்புத்துணியால் அடையாளங்கட்டி நிறுத்திவைத்துக் கொண்டு, மற்றவைகள் ஒருகதிர் அரையணு முதல் ஒன்றரை யணுவரையும்தோட்டத்திலேயே விற்பனையாகிக் கொண்டும் வரு கின்றன. தோட்டம் பார்க்கவந்த ஒருதுரையின் மூலமாக இமயமலை யில் விதை விற்குமிடத்திலிருந்து (Himalayan Seed Store) பல விதமான சோளவிதைகளிருக்கிற தென்று கேள்விப்பட்டு, அவை களையும் வரவழைத்துக் கடந்த நான்கு வருஷங்களாகப் பயிர் செய்து வருகிறேன். அவைகளும் முன் சோளம் போலவே நல்ல பலனைத் தருகிறதாகக் காண்கிறேன். இவைகளோடு நாட்டுமுத்துச் சோளத்தில் மஞ்சள், சிவப்பு, வெள்ளைத்தினுசுகளையும் பயிரிட்டி ருக்கிறேன்.

ஷை சோளங்கள் பயிராகிப்பூத்து விரிந்திருக்கும் சமயத்தில் நாட்டுச்சோளப்பூக்களின் மகரந்தம் தங்கவர்ணச் சோளத்தின் கதிர் களின் குஞ்சங்களில் படும்படி புரட்டப்பட்டது. அவைகளடையா ளங் கட்டப்பட்டு, விளைந்தபின் பார்க்கும்பொழுது, நாட்டுச்சோளம் போல் நிறமும் தங்கவர்ணச் சோளக்கதிர்கள் போல் பருமனு முடையவாய் நூதனமான இரண்டுவிதச் சோளங்களுண்டாகி யிருக்கின்றன. இக்கதிர்கள் ஒவ்வொருவருஷமும் பட்டணத்தில் நடக்கும் Flower Show கண் காட்சிக்கும், மற்றும் பல இடங்க ளில் நடக்கும் காட்சிக்கும் அனுப்பப்பட்டு கண்காட்சி சங்கத் தாரால் நல்ல வென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

நாளதுவருஷம் மார்ச்சுமீ துவக்கத்தில்நடந்ததஞ்சாவூர் ஜில்லா விபசாயச்சங்கத்தில் அக்ராசனாதிபதி R.F. Austin, Esq., I.C.S.,

துரையவர்கள் முன்னிலையில் இக்கதிர்கள் சிலவை காட்டப் பட்டன. அச்சமயம் வந்திருந்த கனவான்கள் எல்லாரும் இத்தானி யம் இந்நாட்டில் பயிர்பண்ணப்படலாமென்று அபிப்பிராயப்பட்ட தினுல், Chairman, அக்ராசனுதிபதி யவர்கள், இச்சோளம் பயிரிடும் விபரத்தையும் கதிர்களின் படத்தையும் அவைகளின் தானிய வரும்படியையும் காட்டும் சிறு குறிப்பொன்று எழுதும்படி விரும்பியதின்மேல் இதை எழுதினேன்.

## பயிரிடும் விதம்.

---

ஆற்றுப் படுகைநிலம் அல்லது கருப்புமண் தரை, பொருக்கு மண் கலந்த செவ்வல்தரை பயிர்களுக்கேற்றது. இப்படிப்பட்ட நல்ல நிலத்தைச் சமமாக்கி ஒரு ஏக்கருக்கு சுமார் 30 வண்டிக்குக் குறை யாமல் அடை எருவாவது மாட்டின்சாணமும் சாம்பலுங்கலந்த எருவாவது போட்டுக் குறைந்த பக்ஷம் 5 உழவாவது உழுது, புழுதியாக்கிக் கிடைகட்டினவுடனே உழுது, அதில் தண்ணீர் பாய்வதற்கு ஏற்றதாக வாய்க்கால் பிடித்துப் பாத்திகளில் 2 அடிக்கு ஒரு சிறுவாய்க்காலாக ; 4 அங்குல ஆழத்தில் இழுத்து, அதில் 1½ அடிக்கு ஒவ்வொருகுழியும் ½அடி ஆழமிருக்கும்படி ஒரே கொத்தினுல் வெட்டி, அதில் ஒரு கைகொண்ட கிடைக்கக்கூடிய நல்ல உரம் போட்டு மண்விரவி, குழிக் கொவ்வொன்றுக விதை களை யூன்றி ஈரங்காயாமல் தூக்குத்தண்ணீர் அல்லது பாய்ச்சல் தண்ணீர் விட்டுவரவேண்டும். அதிக ஈரங்கூடாது. விதைகள் முளைத்து சுமார் 20 நாளைக்குப்பின் ஒரு சாண் உயரமானவுடன், பயிர்களைச்சுற்றி மெதுவாகக் கொத்தி பின் தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். இந்தச்சமயத்தில் பயிர் வெளுத்திருக்குமானுல்,ஒருதண் ணீர் காயப் போட்டுத் தண்ணீர் விடவேண்டும். சுமார் முளைத்த 40 நாளைக்குள் 3 அடி உயர மாகும்போது தோகைகள் ஒடியாமல் எங்கும் முங்க வெட்டிச் சோளத்தை சுற்றி ஒரு அடிமண் வரப்புப் போலணைத்துத் தண்ணீர் விடவேண்டும். பயிரின் அடிப்பாகத்தி லுள்ள 3, 4 கணுக்களிலிருந்து புது வேருண்டாகி அணைத்த மண்

ணில் வேரூன்றுமாதலால் இந்தச்சமயத்திலும் ஒவ்வொருபயிரின் தூரிலும் கொஞ்சம்கொஞ்சம் உரம்வைப்பது நல்லது. இதற்குப்பின் ஈரங் காயாமல் தண்ணீர்விட்டு வரவேண்டும். 2, 3 நாளைக்குத் தண்ணீர் கட்டிநிற்கும்படி விடக்கூடாது. களைகள்அதிகமாய் முளைக்கக்கூடிய நிலத்திற்கு மண்ணணைக்கு முன்னேயாவது அணைத்த பின்னாவது கூட ஒரு களைகொத்துவது நல்லது.

இரண்டடிற்கு மேற்பட்ட கதிர்களில் திடமாயுள்ள இரண்டைத்தவிர மற்றவைகளை எடுத்துவிட்டால் மீதியானவை நன்றாய்ப் பெருத்து மணிபிடிக்கும். பால்பிடிக்கும் காலத்தில் கிளிகளாவது நரிகளாவது நாய்களாவது சேதப்படுத்தாமல், காத்துவரவேண்டும். நரிகளுள்ள இடத்தில்சோளக்கொல்லைக்குச் சமீபத்தில்முளையடித்து நாயைக்கட்டினால் நரிகள்வராது. நாய்களை அவிழ்த்துவிட்டால் தட்டைகளை மடக்கிக் கதிர்களைத்தின்று சேதப்படுத்திவிடும். மார்கழிமீ முதல் தைமீ வரையும், சித்திரைமீ முதல் வைகாசிமீ வரையிலும், ஆடிமுதல் ஆவணி வரையிலும் விதைகள் போட ஏற்ற காலம். தைப்பட்டமும் ஆடிப்பட்டமும் நல்ல பட்டம். சித்திரைப் பட்டம் மலைநாடுகளுக் கேற்றது. சித்திரைப்பட்டம் காற்றிலகப் படுமாதலால் சற்று ஒதுக்கும் கலந்த அகத்தி நிழலுமுள்ள இடங்களில் போட்டு வாடாமல் தண்ணீர் விட்டுவரவேண்டும். ஆடிப் பட்டம் பால்பிடிக்கும் காலத்தில் மழையி லகப்படாதபடி பிந்தாமல் முந்திக்கொள்ள வேண்டும். நாட்டுமுத்துச்சோளத்தைப்போலவே, செய்காலுக்குத் தகுந்தபடி மூன்றுமுதல் மூன்றரை மாசத்திற்குள்ளாகக் கதிரொடிக்கலாம். இதில் 65 நாளைக்குள் விளையும் சர்க்கரை சோளத்திற்கு 15 நாளில் களை கொத்தி 30 ம் நாளில் மண்ணணைக்க வேண்டும். களைகொத்தல், மண்ணணைப்பு முதலியவை இதற்குச் சற்று முன்னதாகவே செய்யவேண்டும். மண்ணணைக்குங் காலத்தில் விசேஷித்த உரங்கள் கொடுப்பது நல்லது.

**முத்துச் சோளக்கதிர்களைப்பற்றிய சில முக்கிய குறிப்புகள்.**



# முத்துச்சோளம். முதலாம் படம்.

முன்பக்கத்தில் ஒன்றென்று இலக்கமிட்ட இரண்டுகதிர்களும் தங்கவர்ணச்சோளத்தின் கதிர்கள். இரண்டாவது இலக்கமிட்ட இரண்டு கதிர்களும் நாட்டு முத்துச்சோளக்கதிர்கள். மூன்றாவது இரண்டுகதிர்களும், பால் வெள்ளைச் சோளத்தின் கதிர்கள். இம் மூன்று வகைகளிலுமுள்ள 6-கதிர்கள் ஒவ்வொன்றின் நீளமும், சுற்றளவும், தானியத்தின் நிறையும், சக்கையின் நிறையும், கதிரின் மொத்த நிறையும், சராசரி தானியத்தின் நிறையும், சராசரி சக்கையின் நிறையும், பின்வரும் அட்டவணையில் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

**தங்க வர்ணச்சோளம், நாட்டுமுத்துச்சோளம், பால் வெள்ளைச் சோளம், இவைகளின் நீளம், கனம், தானியம், சக்கை முதலியவைகளைக் காட்டும்.**

## அட்டவணை.

| நெம்பர். | பெயர். | நீளம், அங்குல். | சுற்றளவு, அங்குல். | தானிய நிறை அவுன்ஸ். | சக்கை நிறை, அவுன்ஸ். | மொத்த நிறை, அவுன்ஸ். | சராசரி அவுன்ஸ். | சராசரி தானியம் அவுன்ஸ். | சராசரி சக்கை அவுன்ஸ். | நூற்றுக்குத் தானியம். | நூற்றுக்குச் சக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தங்கவர்ணம். | $10\frac{1}{2}$<br>12 | $7\frac{3}{4}$<br>7 | 12<br>$13\frac{3}{4}$ | $2\frac{1}{2}$<br>$2\frac{1}{4}$ | $14\frac{1}{2}$<br>16 | $15\frac{1}{4}$ | $12\frac{7}{8}$ | $2\frac{3}{8}$ | 84·42 | 15·58 |
| 2 | நாட்டுமுத்து. | $7\frac{1}{4}$<br>$6\frac{1}{2}$ | $5\frac{1}{4}$<br>$5\frac{1}{2}$ | 3<br>$2\frac{1}{2}$ | $1\frac{1}{4}$<br>1 | $4\frac{1}{4}$<br>$3\frac{1}{2}$ | $3\frac{7}{8}$ | $2\frac{3}{4}$ | $1\frac{1}{8}$ | 70·97 | 29·30 |
| 3 | பால் வெள்ளை. | 9<br>$9\frac{1}{2}$ | $6\frac{1}{2}$<br>$6\frac{1}{4}$ | $8\frac{5}{8}$<br>$9\frac{1}{2}$ | $\frac{7}{8}$<br>1 | $9\frac{1}{2}$<br>$10\frac{1}{2}$ | 10 | $6\frac{1}{16}$ | $\frac{15}{16}$ | 90·62 | 9·37 |

இதில் தங்கவர்ணச் சோளத்தின் கதிர் 16 அவுன்ஸ் அல்லது 1 பவுண்டு கனமாயிறது. பால் வெள்ளைச் சோளத்தின் நிறை $10\frac{1}{2}$ அவுன்ஸூம், நாட்டு முத்துச்சோளத்தின் கதிர் $4\frac{1}{4}$ அவுன்ஸூம் கனமுடையதாயிருக்கிறது. இந்தக்கனத்தைக்கொண்டு நாட்டுமுத்துச் சோளக்கதிர்கள் ஒருபங்குகனமானால் தங்கவர்ணச் சோளத்தின் கதிர்கள் அப்படி நாலுமடங்கும், பால் வெள்ளைச்சோளத்தின் கதிர்கள் $2\frac{1}{2}$ மடங்கும் கனமுள்ளதாகிறது. இதில் நாட்டுமுத்துச் சோளக்கதிர்களைவிட மற்ற இரண்டு சோளங்களும் அதிகம் கண்டுமுதல் கிடைக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. இது தவிர இரண்டாவது படத்தில் 1, 2, 3 நம்பர்களில் கண்டபடி ஒரு கதிரின் தானியத்தின் நிறையையும் சக்கையின் நிறையையும் பிரித்துப்பார்ப்போமானால் மிகுந்த வித்தியாசம் விளங்குகிறது. இரண்டாவது இலக்கமுள்ள நாட்டுச்சோளத்தில் தானியம் மிகவும் சிறிதாயும், சக்கை பெரிதாயுமிருக்க நாம் பார்க்கலாம். அதோடு நடுச் சக்கையின் உள்பாகம் கடினமாயும், தானியம் அதிகக்கடினமில்லாததாயு மிருக்கிறது. இது இப்படி இருக்கையில் 1, 3 நம்பரிலுள்ள தங்கவர்ணச்சோளமும், பால்வெள்ளைச்சோளமும் நடுச்சக்கை சிறுத்தும் தானியம் பெருத்து மிருக்கிறது. இதோடு சக்கையின் உள்பாகம் கடினமின்றி மிருதுவாகவும், தானியமோ மிகவும் கடினமாயும் ஊட்டமாயு மிருக்கிறது. மேலும் தங்கவர்ணச்சோளத்தில் 100 பவுண்டு நிறையுள்ள கதிர் எடுத்துக் கொண்டால் அதில் 85 பவுண்டுதானியமும், மீதி 15 பவுண்டு சக்கையுமிருக்கிறது. நாட்டுமுத்துச்சோளத்தில் 100 பவுண்டுக்கு 71 பவுண்டு தானியமும், 29 பவுண்டு சக்கையுமிருக்கிறது. பால் வெள்ளைச்சோளத்திலோ 100 பவுண்டுக்கு 91 பவுண்டு தானியமும் 9 பவுண்டு சக்கையுமிருக்கிறது. நாட்டு முத்துச்சோளத்தின் மணிகளைப்பார்க்கிலும் தங்கவர்ணச் சோளமணிகள் ஆழமாகவும் அகலமாயிருப்பதும், தங்கவர்ணச் சோளத்தைப்பார்க்கிலும் பால் வெள்ளைச்சோளம் அதிக அகலமாகவும் ஆழமாகவும் கனமாகவுமிருப்பதே இப்பேதத்திற்குக் காரணம்.


II
1
2
3
4
5
6
7
8

# இரண்டாம் படம்.

4, 5, 6, 7, 8 நம்பருள்ள சோளத்தின் கதிர்களை 2ம் படத்தில் காணலாம். அவைகளுக்குச் சக்கரைச் சோளமென்று பெயர். நாட்டுச்சோளமும் தங்கவர்ணச் சோளமும் பால்வெள்ளைச்சோளமும் மடல்கள் பசுமையாய், பால்கதிர்களாயிருக்கும்பொழுது மாத்திரம், தின்பதற்கு மதுரமாயிருக்கும். முற்றின பின் தானியமாக உதவும். ஆனால், சர்க்கரை சோளமோ மடல்கள் முற்றி கதிர்கள் சாய்ந்து விழுந்தபின்னுங்கூட, சோளம் பால்போலவே இருக்கும். அதிகமாய்க் காய்ந்தபின் மாத்திரம் தானியத்திற்குதவும். இத்தானியங்கள் மிகுந்த ருசியுடையதாயிருக்கிறது போலவே அதிகக் குணமுடையதாகவு மிருக்கிறதென்று அறிஞர்களால் மதிக்கப் படுகிறது. டேபிள் மேய்ஸ்என்று வழங்கி வருகிறது. தானியத்தின் கண்டுமுதலும் அதிகம். இரண்டு மாசத்திற்குள் இதுவிளைந்து விடுவதால் அதிக லாபம் தரக்கூடிய தென்றே சொல்லவேண்டும். இரண்டு மாசத்திற்குள் விளையக் கூடியதா யிருப்பதினிமித்தம் நல்ல உரங்கொடுத்து தண்ணீர் வாடாமல் பார்த்து வரவேண்டும். இவைகள் பூக்கும்போது கதிர்களின் மெல்லிய இழைபோன்ற குஞ்சங்கள் அதிகப்பனியிலும் மழையிலும் அழுகிப்போகு மியல்புடைய தாயிருக்கின்றன. ஆகையால், அப்படியில்லாத எந்தக் காலத்திலும், அதாவது, ஐப்பசி, கார்த்திகை நீங்கலான எந்தக் காலத்திலும் பயிரிடலாம். இப்பயிர்கள் மழையிலகப்பட்டால் நரைத்துப்போம். பூக்கும்காலத்தில் மழையிலகப்பட்டால் பால் ஒழுகிப்போம். முத்தின காலத்தில் மழையிலகப்பட்டால் முளைத்துப்போமாதலால், ஐப்பசி, கார்த்திகை காலத்து மழையில் அகப்பட்டுக் கொள்ளாதபடி பார்க்க வேண்டும். ஆனால் மழை பஞ்சமா யிருக்கும் இக்காலதர்மத்திற்கு எக்காலமும் போடலா மென்று தோன்றுகிறது.

பலவகையான இச்சோளங்களை முத்துச் சோளந்தானே என்று அற்பமாய் நினைப்போம். தாழ்ந்த ஜனங்கள் சாப்பிடுமோகாரமென்று ஏழனம்பண்ணுவோம். ஆனால், நம்மருமை மக்கள்

பாலர்களா யிருக்கும்போது பாலுக்குப்பதில் நல்ல ஆகாரமென்று சிறந்த வைத்தியர்களால் சொல்லப்பட்டு, டப்பி டப்பியாய்க் "கார்ண்பிளவர்" என்று வாங்கிக் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பதும் இச் சோளமாவுதான். டப்பியின் மேல் இச்சோளக்கதிர்களின் படமிருப்பதே அதற்குச்சாக்ஷி. இத்தானியமிருந்து விளையும் அமெரிக்காவில், இவைகளை நன்றுயறைத்து தண்ணீரால் சுத்தம் செய்து மெல்லிய மாவாக்கி கப்பல் கப்பலாக அந்நியதேசங்களுக் கேற்றுமதி செய்கிறுர்கள். அவைகள் அமெரிக்கன் பிளவர் என்றும், மரிக்கன் மாவென்றும், மைதாமா வென்றும் அழைக்கப்பட்டு ஒரு சிறு கிராமங்களிலுங்கூட ஏராளமாய் வாங்கி உபயோகப் படுத்தப்படுகிறது. அவைகள் மிகவும் மெல்லியதாகவும் வெண்மை யாகவு மிருப்பதைக் கொண்டு தோசைகள் வார்க்கவும், போளி செய்யவும், பூர்தி, காரப் பூர்திசெய்யவும், ஜிலேபி பிஸ்கோத், ரொட்டிகள், ரோல் ரொட்டிகள் ஏராளமாய்ச் செய்யவும் படுகிறது. இவைகள் ரவாவினுல் செய்யப்பட்டவைக ளென்று நாம் பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளும் பதார்த்தங்கள் யாவும் பம்பாய் ரவாவென்று அழைக்கப்படும் சோளரவா கலப்புத்தானே. இப்படிச் சிறுவர் முதல் பெரியவர் வரையும் உபயோகித்துவரும் இச்சோளத்தை ஏன் அதிகம் விருத்தி பண்ணுதிருக்க வேண்டும். நாட்டுக்கதிர்கள் கால்பவுண்டு இடையாயிருக்கையில், தங்கவர்ணச் சோளக்கதிர்கள் ஒரு பவுண்டு இடையாயிருக்கிறது. ஒரு பவுண்டுமாவை நாம் 4 துட்டு விலைகொடுத்து வாங்குகிறோம். மூன்று பவுண்டிடையுள்ள சோளத்தை 1 அணு 4 பைசாவுக்கு விற்கிறோம். 1 அணு 4 பைசாவுக்கும் 5 பைசாவுக்கும் எவ்வளவோ வித்தியாசம். 1 பை பெருமானதை 3 பை விலை கொடுத்து வாங்குகிறோம். அமெரிக்கர்கள் சோளத்தினுல் மிகுந்த லாபமடைந்து வருகிறுர்கள். நம்தேசத்தில் அநேக புஞ்சைநிலங்களும் 'படுகைநிலங்களும்'நெல்லறுத்தபின் நஞ்சைநிலங்களும் இப்பயிருக்கு மிகவுமேற்றவை. ஒரு ஏக்கருக்கு எச்செலவும் போக 100 முதல் 150 ரூ. வரையும் லாபம் கிடைக்கும் மாவாகவாவது ரவாவாகவாவது செய்யும்பொழுது முன்னையை விட இருமடங்கு லாபந்தரும். கொஞ்சம் கொஞ்சமாக அங்கங்கே விருத்திசெய்து உபயோகப் படுத்திப் பார்த்தால், நம் நாட்டிற்கு

பஞ்சகாலத்தில் மிகுந்த ஆதரவாயிருக்குமென்று நிச்சயமாய் நம்புகிறேன். இச்சோளங்களை நாட்டுமுத்துச் சோளம்போல் சமையல் செய்யலாம், பலகாரங்கள் செய்யலாம். புதியதென்று தோன்றுகையில் அதைப்பலவிதத்தாலும் ஏழனம்செய்வது மனுட இயற்கை. அதிகப் புத்திமான்கள் பல ஆக்ஷேபனைகளையும் பரீக்ஷையால் அறிந்து அதின் குணத்தை நிலைநாட்டி இருக்கிறார்கள். நாமும் அப்படியே பரீக்ஷித்துப்பார்த்தோமானால், மிகுந்த நன்மையைக் காணபோம். நெல்ருசியே மிகுந்துள்ள இச்சோழ தேசத்திலுங்கூடக் கொண்டாடக் கூடியதாயிருக்கிறது. ஒரு பவுண்டு நிறையுள்ளவிதைகள், $1\frac{1}{4}$ ரூ விலையில் எல்லா இங்கிலீஷ்விதை ஷாப்புகளிலுங் கிடைக்கும். நம் நாட்டில் அதிகமாய்ப் பரவவேண்டுமென்றும் விருப்பத்தோடு தஞ்சை ஜில்லா விபசாயச் சங்க அக்ராசனாதிபதி மிஸ்டர். ஆஸ்டின் துரையவர்கள் கேட்டுக்கொண்டதினால், ஒருபவுண்டு நிறையுள்ள விதை 8 அணாவுக்குக் கொடுக்கத்தயார் செய்யப்பட்டிருக்கிறது. கொஞ்ச விதைகள்தான் விதைக்காக சேர்க்கப் பட்டிருக்கிறது.

## தட்டைகள்.

1. தட்டைகள்—நாட்டு முத்துச் சோளத்தின் தட்டைகளைப் பார்க்கிலும இத்தட்டைகள் அதிகத்தித்திப்பாயிருப்பதினால், மாடுகள் தட்டைகளைக் கழிக்காமல் தின்றுவிடும். கதிர்கள் ஒடித்தபின், தட்டைகளை வெட்டிவிடாமல் நிறுத்தி வைத்து அவைகள் பச்சையாயிருக்கும் போதே கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிப் போடவேண்டும். மாடுகளை விட்டால்சேதப்படுத்தி விடும். நல்லவெயிலுள்ள காலமாயிருந்தால், அதிகாலையில் வெட்டி நன்றாய்க் காயவைத்து 8 நாளானபின் கட்டி அடைந்து மழையில் தண்ணீரில் நனைந்து போகாதபடி காப்பாற்றிவைத்தால், மழைகாலங்களில் மிகுந்த உபயோகப்படும். பசுக்களுக்குப் பாலதிகம் ஊறும். நன்றாய்ப்புஷ்டி கொடுக்கும்.

2. கதிர் மடல்கள்—ஒவ்வொரு கதிரிலுள்ள தானியங்களும் மழை பனியினாலும் பக்ஷிகளினாலும், சேதமடையாதிருக்கும்படி

மெல்லிய தாள்களால் மூடப்பட்டிருப்பதை நாம்காணலாம். அவைகள் மாடுகள் நன்ருய்த் தின்னும். அதைத்தவிர வேறு உபயோகம் செய்வதில்லை. அவைகள் மிகவும் மெல்லியதாகவும் வெண்மையாகவுமிருக்கிறதைக்கொண்டு ஜப்பானியர் உபயோகத்திற்கு கொண்டுவந்திருக்கிருர்கள். எப்படி யென்ருல், தொன்னை போலிருக்கும் அடிப்பாகத்தையும் முரட்டுத் தாள்களையும் நீக்கிவிட்டுத் துண்டுகளாக ஒரே அளவில்வெட்டி சிறு புத்தகமாகச் சேர்த்துத் தைத்து ஸிகரட் சுருட்டுவதற்கு உபயோகப் படுத்துகிருர்கள். 100 தாள்கொண்டது ஒரு புஸ்தகம். ஒரு மடலில் $2\frac{1}{2}$ அங்குல நீளமும் $1\frac{1}{2}$ அங்குல அகலமுமுள்ள 6 தாள்கள் கத்திரிக்கலாம். சராசரி 16 தாள்களிருக்கும் ஒரு கதிரில் 2பை பெருமான புஸ்தகமாகும். ஆகவே, ஒரு கதிருக்கு தானியவரும்படி போக 2பை தாள்களால் கிடைக்கிறது.

இதுதவிர, இத்தாள்களை ஏராளமாகச் சேர்த்துக் காகிதம் செய்பவர்களுக்கு நல்ல விலைக்குக் கொடுக்கலாம்.